5

# இயேசு எவ்விதம் தமது யூத சமூகத்தில் பொருந்தியிருந்தார்?

*கல்வியாளர்கள் மற்றும் திறனாய்வாளர்கள் ஆகியோர் "உண்மையான இயேசு" என்ன பேசினார் மற்றும் என்ன செய்தார் என்பதை தீர்மானிக்க, அதிகாரப்பூர்வமானதிலிருந்து கற்பனையானதை பிரித்து பார்க்க முயற்சித்தார்கள். "வரலாற்றின் இயேசு" (அதாவது, உண்மையில் வாழ்ந்த இயேசுவானவர்) மற்றும் "விசுவாசத்தின் இயேசுவானவர்" (கிறிஸ்தவர்கள் அவரைப்பற்றி நம்புகிறபடியாக), ஆகிய இருவருக்கும் இடையிலான வித்தியாசத்தை அறியும் முயற்சியில், சிலர் இயேசுவை தாம் வளர்ந்த மற்றும் ஒரு அங்கமாக இருந்த யூத சமயத்திலிருந்தே முழுவதுமாக பிரித்து விட்டார்கள். உதாரணமாக, இயேசு சொற்பொழிவாளர் கூட்டத்தார், இயேசு யூத சமயத்தின் அடிப்படையில் அல்லாமல், கிரேக்க கலாச்சாரத்தின் அடிப்படையில் விவரிக்கப்படவேண்டும் என வலியுறுத்துகிறார்கள். இயேசு ஒரு யூதராக இருந்தார் மற்றும் நமக்கு தெரிந்த அளவில் அவர் ஒருபோதும் தனது வாழ்நாள் முழுவதும் பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறாமல் இருந்ததால், இது பொறுத்தமற்றதாக இருக்கிறது.*

*இயேசு தனது யூத சமகால மனிதர்களிடத்திலிருந்து முற்றிலும் மாறுபடுவார் என எதிர்பார்ப்பதை விட, நாம் அவர் யூத சமயத்தால் அதிகமாக செல்வாக்கு செலுத்தப்பட்டிருப்பார் எனவும் மற்றும் இது அவருடைய போதனைகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றில் பிரதிபலிக்கும் என எதிர்பார்க்கலாம். அதேபோல, சுவிசேஷங்களிலுள்ள கருத்துகளும் அவருடைய யூதத்தன்மையை பிரதிபலிக்கும் என நாம் எதிர்பார்ப்போம். உண்மையில், சுவிசேஷங்களில் நாம் இதைத்தான் கண்டுபிடிக்கிறோம். இயேசு தமது காலத்திலிருந்த யூத மதத்தின் பின்புயத்தில் ஒரு கைக்கொள்பவராக தமது சொந்த வழிகளில் காரியங்களை கண்டவராக விவரிக்கப்படுகிறார்.*

*"உண்மையில் இயேசு தாம் வாழ்ந்த யூத சமூகத்தில் எப்படி பொருந்தி வாழ்ந்தார்?" என நாம் கேட்கவேண்டிய அவசியம் இருக்கிறது. எந்த அளவில் மற்றும் எந்த வழிகளில் அவர் தமது யூத பாரம்பரியத்தை/கலாச்சாரத்தை பிரதிபலித்தார்? எந்த அளவில் மற்றும் எந்த வழிகளில் அவர் தமது யூத பாரம்பரியத்தை/கலாச்சாரத்தை விட்டு விலகிச் சென்றிருந்தார்? இந்த கேள்விகளுக்கு நாம் பதில்கள் பெறாதவரையிலும் இயேசுவை குறித்த தெளிவான வரலாற்று காட்சியை நாம் எதிர்பார்க்க இயலாது. அதிர்ஷ்டவசமாக, சுவிசேஷங்கள் நமக்கு நிறைய தகவல்களை கொடுக்கின்றன - ஜோஸிபஸின் எழுத்துக்களைப் போலவே மற்ற சமகாலத்து ஆதார மூலங்களும் கொடுக்கின்றன.*

## I. இயேசுவானவருடைய யூத சமய விசுவாசம்

*இயேசுவானவர் ஒரு அர்ப்பணிப்புள்ள, நடைமுறைப்படுத்துகிற, யூத சமயத்தின் அடிப்படை நம்பிக்கைகளை உறுதியாக கடைப்பிடித்தார் என்பதற்கு நாம் என்ன அடையாளங்ளை உடையவர்களாக இருக்கிறோம்? மேலோட்டமாக சுவிசேஷங்களை வாசிப்பது கூட, எபிரேய வேதவாக்கியங்களில் பதியப்பட்டிருந்த சம்பவங்களை இயேசு உண்மையானதெனக் கருதினார் என்பதை வெளிப்படுத்துகிறது. அவர் பழைய ஏற்பாட்டு சம்பவங்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட பல்வேறு கதாபாத்திரங்களின் ஜீவியங்களை அடிக்கடி குறிப்பிட்டார். அது அவைகளின் உண்மைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றை முழுமையாக ஏற்றுக்கொள்வதை உணர்த்துவதாகவே இருந்தது (காணவும், உதாரணமாக, மத்தேயு 11:20-24; 12:1-8; மாற்கு 10:17-22; 12:24-27). இத்துடன், இயேசு வேத வாக்கியங்களை மேற்கோள் காட்டின விதத்திலிருந்து, அவர் அவைகளுக்கு மிக அதிக மதிப்பு கொடுத்தார் என்பதை உறுதிப்படுத்துகிறது. லூக்கா 4:1-13, சாத்தானுடைய சோதனைகளுக்கு, இயேசு உபாகமத்திலிருந்து வசனங்களை மேற்கோள் காட்டி, "எழுதியிருக்கிறதே ..." என்று பதில் அளித்தார். மலை பிரசங்கத்தில், அவர் நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசனத்தை ஒழிப்பதல்ல, அதை நிறைவேற்றுவதே தமது நோக்கம் என்பதை அறிவித்தார். அவைகளில் எழுதப்பட்டிருந்த யாவும் நிறைவேற வேண்டும் என அவர் அறிவித்தார், கற்பனைகளில் சிறிய ஒன்றையாகிலும் தளர்த்திவிடுவதற்கு எதிராக அவர் எச்சரித்தார் (மத்தேயு 5:17-19). லூக்கா 4:16 இயேசு தாம் வளர்ந்த நாசரேத்தில் ஜெபஆலயத்தில் கலந்து கொண்டதையும் மற்றும் அங்கே அவர் தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களை வாசிப்பதில் பங்கேற்றதையும் பதிவு செய்கிறது.*

*லூக்கா 4ன் அதே சம்பவம், "தமது வழக்கத்தின்படியே, ஓய்வு நாளிலே ஜெப ஆலயத்தில் பிரவேசித்தார்" என கூறுகிறது, அது இயேசு தவறாமல் ஜெப ஆலயத்தில் கலந்து கொண்டார் என்பதை குறிப்பிடுகிறது. மத்தேயு 17:24-27, இயேசு தேவாலய பராமரிப்புக்காக சேகரிக்கப்பட்ட அரைசேக்கல் வரியை செலுத்தினார் என்பதை சுட்டிக்காட்டுகிறது. மேலும், இயேசு பிரமாணத்தின் கேட்புகளை பஸ்காவின்போது தேவ ஆலயத்திற்கு சென்றதின் மூலம் மற்றும் அவருடைய சீஷர்களுடன் பஸ்கா உணவில் பங்கு பெற்றதின் மூலம் கடைப்பிடித்தார். இயேசு தமது நாளில் இருந்த யூத சமயத்தின் நிறுவனங்கள்/சம்பிரதாயங்களை அங்கீகரித்தார் என்பதற்கான அறிகுறிகள் இருக்கின்றன. இருப்பினும் அவைகள் எல்லாவற்றையும் அவர் முழுமையாக ஒத்துக் கொள்ளவில்லை (மத்தேயு 23:1-3).*

*இயேசுவானவர் அர்ப்பணிப்புள்ள, கடைப்பிடிக்கிற ஒரு யூதராக இருந்தார்; ஆனால் அவர் தனது கால யூத சமயத்தில் எங்கே பொருந்தி வந்தார்?*

## II. யூதர்களுடைய பொதுவான நம்பிக்கைகளின் பின்புலம்

*யூத சமயத்தின் பொதுவான குணாதிசயங்கள் கி.பி. முதல் நூற்றாண்டில் யூதர்களை பண்டைய உலக/மக்களிலிருந்து பிரித்து வைத்திருந்தது. இந்த குணாதிசயங்கள் யாவை?*

### ஒரே இறை நம்பிக்கை

*"ஒரே இறை நம்பிக்கை" என்பதின் பொருள் ஒரே ஒரு தேவன்தான் இருக்கிறார் என்ற நம்பிக்கையாக இருக்கிறது. பண்டைய உலக மக்களில் யூதர்கள் மாத்திரமே ஒரே தேவனை விசுவாசிக்கிறவர்களாக இருந்தார்கள். உலகத்தின் பல்வேறு பகுதிகளை கட்டுப்படுத்துவதாக செயல்படும், ஒன்றுடன் ஒன்று போட்டியாக செயல்படும் பல்வேறு கடவுள்களின் கூட்டத்தை நம்புவதற்கு பதிலாக அப்படிச்செய்தார்கள். (ஒரு பார்வோன் எகிப்தில் ஒரே இறை சமயத்தை ஒரு குறுகிய காலம் அமுல்படுத்தினார், ஆனால் அது அவர் வாழ்ந்த காலம் வரை மட்டுமே வாழ்ந்தது.) இந்த யூதருடைய தனித்தன்மை சேமா என்று அறியப்பட்ட வசனப்பகுதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. "இஸ்ரவேலே, கேள்! நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர், நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக" (உபாகமம் 6:4, 5). இந்த மூலைக்கல்லான உபதேசம் அர்ப்பணிக்கப்பட்ட யூதர்களால் ஒரு நாளைக்கு இரண்டு முறை மனப்பாடமாக சொல்லப்பட்டு வந்தது. இது "பத்து கட்டளைகளின்" முதல் கட்டளையை பிரதிபலித்தது: "என்னையன்றி, [அதாவது என்னைதவிர] உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்" (யாத்திராகமம் 20:3; உபாகமம் 5:7).*

*யூதர்களின் இந்த ஒரு இறைவழிபாட்டு நம்பிக்கை ஆண்டுகளினூடே சிறப்பான, குறிப்பிடத்தக்க ஒன்றாக இருப்பதின் உண்மை என்னவெனில், பண்டைய உலகின் மற்ற மக்கள் சாதாரணமாக மற்றவர்களுடையதை தங்கள் சொந்த தெய்வமாக ஏற்றுக்கொண்டார்கள் - இந்த முறையானது மக்கள் குழுக்கள் பிறருடைய "சமய முறையை தழுவிக்கொள்ளுதல்" என அறியப்பட்டிருந்தது. யுத்தத்தில் தோற்கடிக்கப்படும் மக்கள்மேல் இந்த முறை திணிக்கப்பட்டது, மற்றும் யூதர்கள் தங்கள் வரலாற்றில் அந்நிய சக்திகளால் பலமுறை வெற்றிகொள்ளப்பட்டிருந்தனர். பொதுவாக அவர்கள் இந்த முறையை எதிர்த்தார்கள் - இருப்பினும் - தீர்க்கதரிசிகள் காண்பிக்கிறபடி - சில சமயங்களில் அவர்கள் இதற்கு பலியானார்கள் (எரேமியா 2:4-13; எசேக்கியேல் 8:7-18; காணவும் 1 இராஜாக்கள் 18:1-46). அந்நிய தெய்வங்களை வழிபடுவது தீர்க்கதரிசிகளால் கண்டிக்கப்பட்டிருப்பது, யூதர்களின் ஒரு இறை வழிபாட்டு நம்பிக்கைகளுக்கு வலுவான சாட்சியமாக இருக்கிறது.*

### தெரிந்தெடுத்தல்

*தேவனானவர் ஆபிரகாமோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் அடிப்படையில் (ஆதியாகமம் 12 மற்றும் 15), யூதர்கள் தங்களை தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட விசேஷித்த மக்களாகவும், தங்கள் மூலமாக தேவன் உலகத்திற்கு இரட்சிப்பு கொண்டுவர செயல்படுவார் என்பதையும் கண்டார்கள். அவர்களுடைய வரலாறு தேவன் அவருடைய உலகில் நடப்பித்த மீட்பின் நடவடிக்கைகளாக இருக்கிறது. இந்த நம்பிக்கை தவிர்க்க முடியாமல் இனம்/மற்றும் மதம் ஆகியவற்றின் கலப்பில்லாத ஒரு மக்களை உருவாக்கும் என்ற பயத்தோடுகூட, ஒரு விலகியிருத்தல் என்ற உணர்வையும் ஏற்படுத்தியது. இந்த பயம்/அக்கரை பாபிலோனிய அடிமைத்தனத்தின்போதும் மற்றும் அதற்கு பின்னரும் உச்சத்தை எட்டியது, தனித்த மக்களாக இருப்பது என்பது இறை*

நம்பிக்கைசார்ந்த ஒரு விஷயமாக மட்டும்அல்ல, ஒரு தப்பிப்பிழைப்பதற்கான காரியமாகவும் இருந்தது. பழைய ஏற்பாட்டின் புத்தகங்களான எஸ்ரா மற்றும் நெகேமியா, ஆகியவை சிறையிருப்புக்கு பிந்தின காலத்தில் இந்த நம்பிக்கை ஒவ்வொரு நடைமுறை காரியங்களிலும் எவ்விதம் செயல்படுத்தப்பட்டது என்பதை காண்பிக்கிறது.

தெரிந்தெடுக்கப்படுதல் என்ற இந்த வலிவான எண்ணம் மற்றும் அத்துடன் தொடர்புடைய விலகி தனித்திருத்தல் என்பது யூதர் மற்றும் சமாரியர் களுக்கிடையிலான மோதல்களுக்கு காரணமாயிருந்தது என்பது சுவிசேஷங்களில் தெளிவாய் காணப்படுகிறது. சமாரியர்கள் எப்படி தோன்றினார்கள் என்பது அவ்வளவு தெளிவாக தெரியவில்லை, ஆனால் அவர்கள் சிறையிருப்பின் காலத்தில் பாலஸ்தீனத்தில் விடப்பட்டிருந்த யூதர்கள் மற்றும் அவர்கள் புறவின அயலகத்தாரோடு ஏற்பட்ட கலப்பு திருமணத்தின் வாயிலாக உருவானவர்களாக இருந்தார்கள். சிறையிருப்பிலிருந்த யூதர்கள் திரும்பினபோது, அவர்கள் அந்நிய தேசத்தில் தங்களுடைய யூத அடையாளத்தை கண்டிப்பாக பராமரித்து, பிழைத்து திரும்பி வந்தபோது, அங்கேயே விடப்பட்டிருந்தவர்கள் சமரசம் செய்துகொண்டவர்களாக இருந்ததை கண்டபோது திடுக்கிட்டார்கள். நூற்றாண்டுகளுக்கான பகை, அவ நம்பிக்கை மற்றும் நிராகரிப்பு ஆகியவை இதின் விளைவாக அமைந்தது. சமாரியர்கள் தாங்கள் எருசலேம் தேவாலயத்தை திருப்பி கட்டுவதில் தவிர்க்கப்பட்டதை அறிந்து, முறையான யூத சமயத்திலிருந்து தங்களை விலக்கிக்கொண்டு அவர்கள் தங்களுடைய போட்டி ஆலயத்தை பாலஸ்தீனத்தின் வடபகுதியில் (“சமாரியா”) கெர்சீம் மலையில் அமைத்தார்கள். இந்த உண்மை இயேசுவானவர் மற்றும் சமாரியப்பெண் ஆகியோருக்கிடையில் கிணற்றண்டையில் நடந்த சம்பாஷனையின் பின்புலத்தில் யோவான் 4 ஆம் அதிகாரத்தில் காணப்படுகிறது. இது இயேசுவின் நல்ல சமாரியன் உவமைக்கு ஒரு அழுத்தமான தரத்தை கொடுக்கிறது: இகழப்பட்ட ஒரு இனக்குழுவை சேர்ந்த ஒருவர் ஒரு சரியான காரியத்தை செய்வார் என்பதும் ஒரு யூத ஆசாரியர் மற்றும் லேவியர் ஒருவர் எப்படி அதைக் செய்யத் தவறிவிட்டார்கள் என்ற கருத்து அதிர்ச்சியூட்டக் கூடியதாக இருந்தது! யூத மற்றும் சமாரிய போராட்டம் யூதர்கள் தேவனுடைய சொந்த ஜனமாக தெரிந்தெடுக்கப்பட்டு மற்றும் அழைக்கப்பட்டிருந்தார்கள் என்ற உணர்வின் முக்கியத்துவத்திற்கு சான்றளிக்கக்கூடியதாக இருந்தது.

**பிரமாணம்**

எகிப்திலிருந்து வனாந்திர யாத்திரை மற்றும் பத்து கட்டளைகள் கொடுக்கப்படுவதை நோக்கி பின்னோக்கி செல்லும்போது, பிரமாணம் யூதருடைய நம்பிக்கை மற்றும் அன்றாட வாழ்க்கை ஆகியவற்றில் மையமான பங்காற்றியது. பாபிலோனியர்களால் தேவாலயம் கி.மு. 586ல் இடிக்கப்பட்ட பிறகு, பிரமாணமானது நாட்டின் மிக முக்கியமான ஒன்றாக ஆனது. இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவது, பிரமாணமானது கொண்டுசெல்லப்படக் கூடியதாக இருந்தது. தேவாலயம் அழிக்கப்பட்டு, அந்நிய நாட்டில் அவர்கள் செயல்பட ஆசாரியத்துவம் இல்லாத நிலையில், அவர்களுக்கு வழிநடத்துதலையும் நிலைப்புத்தன்மையையும் கொடுக்க, சிறைபிடிக்கப்பட்டிருந்தவர்கள் நியாயப்பிமாணத்தைக் கொண்டிருந்தனர்.

இரண்டாவதாக யூதர்கள் பிரமாணத்தை கண்டிப்பாக கடைப்பிடித்தது, யூதர்களை மற்ற மக்களிடத்திலிருந்து பிரித்து வைத்தது. அவர்கள் எங்கிருந்தாலும் ஒரே ஜனம் என்ற வகையில் அவர்கள் தப்பிப்பிழைத்திருப்பதை உறுதிசெய்தது. விருத்தசேதனம், சுத்தமான மற்றும் அசுத்தமான உணவுகள், ஓய்வுநாளை சரியான வகையில் ஆசரித்தல் ஆகியவை பற்றிய பிரமாணங்கள் விசேஷமாக உண்மையாக இருந்தன, ஏனெனில் இந்த நடைமுறைப் பயன்பாடுகள் பெரும் பான்மையாக யூதமதத்திற்குத் தனிப்பட்டவைகளாக இருந்தன.

ஜெப ஆலயம் (synagogue) என்று அழைக்கப்படும் ஸ்தாபனம் பிரபலமாவதற்கு, எகிப்தைவிட்டு வெளியேறும்போதும் அதற்குப் பின்பும் நியாயப்பிரமாணம் அதிகமாக வலியுறுத்தப்பட்டது ஒருவேளை காரணமாக இருக்கக்கூடும் பழைய ஏற்பாட்டில் சொல்லப்படவில்லையென்றாலும், ஜெப ஆலயம் என்பது இயேசுவின் நாட்களில் யூதமதத்திலும் சமூக வாழ்க்கையிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பகுதியாக இருந்தது. யூதர்கள் தங்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டபோது ஜெப ஆலயங்கள் ஜெபம் செய்யவும் நியாயப்பிரமாணத்தைப் படிக்கவும் மற்றும் ஆராதிக்கவும் கூடும் இடங்களாக உயர்த்தப்பட்டன. கர்த்தருடைய ஆலயம் (temple) சில காலம் இல்லாதிருந்தபடியால், பாலஸ்தீன தேசத்திற்குள்ளும் ஜெபஆலயங்கள் தோன்றின. நியாயப்பிரமாணத்தில் வல்லுநர்கள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட ரபீக்கள் என்று அழைக்கப்பட்ட ஆசிரியர்கள் வகையைச் சேர்ந்தவர்களால் ஆதிக்கம் செய்யப்பட்டிருந்தன.

**ஆலயம்**

எருசலேமிலுள்ள ஆலயமானது, யூத பலி முறைகளின் மற்றும் நியாயப்பிரமானத்தினால் எதிர்பார்க்கப்படுகிற பலவகையான வருடாந்தரப் பண்டிகைகளின் மையமாயிருந்தது. ஆசாரியத்துவ முறையானது பலியிடுதலில் மேற்பார்வையிடப்பட்டு ஆலயத்தில் நடைமுறையில் இருந்தது. ஆகவே அது எல்லா யூதர்களுக்கும் மைய முக்கியத்துவமானதாய் இருந்தது. அவர்களுக்கு ஒரே ஒரு ஆலயம் மாத்திரம் இருந்தது, அங்கு அதிகாரிகளாக இருந்த ஆசாரியர்களால் பலிகள் செலுத்தப்பட்டன. (இதற்கு நேர்மாறாக ஜெப ஆலயங்கள் அநேகம் இருந்தன மற்றும் பிரமாணத்தைப் போதிப்பவர்களாலும் ஜெபஆலய அதிகாரிகளாலும் இவை நடத்தப்பட்டிருந்தன, ஆசாரியர்களால் அல்ல; அங்கே பலிகள் எதுவும் செலுத்தப்படவில்லை.)

எல்லா யூதர்களுக்கும் முக்கியமான மையமாக ஒரு அளவுக்கு இருப்பதினால் - அப்படி இருந்தும்கூட - யூதத்துவத்திற்குள்ளேயே ஆலயமானது விவாதத்திற்குறிய மையக்கருத்தாய் இருந்தது. ரோமர்கள் ஆட்சி செய்த காலத்தில், ஆட்சி செய்யும் அதிகாரிகளுடன் ஒத்துழைப்பதற்காக, பிரதான ஆசாரியர்கள் ரோமர்களாலேயே நியமிக்கப்பட்டனர். இந்தத்தலைவர்கள் மிகவும் அடிக்கடி குறைவாகவே தகுதியுள்ளவர்களாகவும், அப்படியிருந்தாலும், மிகவும் அடிக்கடி அரசியல் காரியங்களில் சம்பந்தப்பட்டவர்களாகவும் நியாயப்பிரமாணத்தின் தரஅளவையை வெகுவாக மீறுகிறவர்களாகவும் இருந்தார்கள். இதன் விளைவாக, எஸ்சென்னெஸ் போன்ற சில யூத குழுக்கள் ஆலயத்தையும் அதின் ஆசாரியத்துவத்தையும் சீர்கெட்டது என பழித்துரைத்து, எந்த சம்பந்தமும் வைத்துக் கொள்ள மறுத்துவிட்டன.

**வரவிருக்கும் காலம்**

*அநேக நூற்றாண்டுகளின் அந்நிய ஆதிக்கத்திற்குப்பிறகு, பலஸ்தீனத்திலிருந்த முதல் நூற்றாண்டு யூதர்கள், அவர்களின் கொடுங்கோலாளர்களை தேவன் நிர்மூலமாக்கி, தாவீது மற்றும் சாலொமோனின் நாட்களில் இருந்தது போல மீண்டும் அவர்களின் தேசத்தை முன்பிருந்த மகிமைக்கும் சுதந்தரத்திற்கும் கொண்டுவரும் காலத்தை எதிர் நோக்கியிருந்தனர். மேசியா ("அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவர்") என்று அறியப்பட்டிருந்த விசேஷ தலைவரின் வருகையால் "தங்க காலம்" என்பது ஏற்படுத்தப்படும் என்று அநேகர் எதிர்பார்த்தனர். வரப்போகிற மேசியாவைப்பற்றி அநேக கருத்துகள் இருந்தன; ஆனால் பெரும்பாலானோர் ஒரு வகையான "இரண்டாம் தாவீது," வீரன் - இராஜா வந்து ரோம அரசாட்சியை தூக்கி எறிந்து, இஸ்ரவேலை மீண்டும் முன்னணிக்குக் கொண்டுவருவார் என்று எதிர்பார்த்தார்கள். அவர்களின் மேசியத்துவ கண்ணோட்டங்கள் எப்படியிருந்தாலும், பெரும்பாலான யூதர்கள் "இஸ்ரவேல் மீளக்கட்டுவிக்கப்படுதலையும்" (லூக்கா 2:25ல் "இஸ்ரவேலின் ஆறுதல்" என அழைக்கப்பட்டது) "இராஜ்யத்தின்" வருகையையும் எதிர் நோக்கியிருந்தார்கள். இந்த எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சிகள், மகிமையும் சுதந்தரமான காலத்தையும் கொண்டுவர வேண்டியதாயிருந்தது.*

**தனிப்பட்ட தேவபக்தி**

*ஆலயத்தில் நியமிக்கப்பட்ட பலிகளைச் செலுத்துதல், பொது பண்டிகைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஆலய ஆராதனையுடன் கூடுதலாக, தேவனுக்குத் தங்களுடைய தனிப்பட்ட அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் பொதுவான வழிகளை யூதர்கள் கொண்டிருந்தனர். இவை மூன்று முக்கியமான தேவபக்தியின் செய்கைகளைச் சுற்றி இருந்தன: ஜெபித்தல், உபவாசித்தல் மற்றும "தான தருமம் செய்தல்" (ஏழைகளுக்குக் கொடுத்தல்). இயேசு மலைப்பிரசங்கத்தில் போதித்தபோது இந்த மூன்று காரியங்களையும் தனிப்படுத்தி, ஒருவர் தம் தேவபக்தியை மற்றவர்கள் காணவேண்டும் என்பதற்காக செய்யக்கூடாது என்று கூறினார் (மத்தேயு 6:1-18).*

*இவைகள், இயேசுவின் நாட்களில் யூதர்கள் பொதுவாகக் கொண்டிருந்த சில முக்கியமான நம்பிக்கைகளும் பழக்கங்களுமாகும். இவைகளை மனதில் கொண்டு யூதர்கள் தங்களுக்குள்ளே பிரிந்தவர்களாயிருந்த வழிகளையும் நாம் காண்போம்.*

## III. யூதரின் வேறுபாடு மற்றும் விரோதங்களின் பின்னணி

*முதல் நூற்றாண்டு யூதர்கள் கண்டிப்பாயும் குறிப்பாகவும் ஒருவருக்கொருவர் வேறுபட்டிருந்தார்கள் என்று இப்போது நாம் அறிகிறோம். இயேசுவின் நாட்களில் யூதத்துவமானது மிகவும் விரிவான வேறுபாடுகளால் அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. பிரமாணத்தை வியாக்யானம் செய்வதிலும் கடைப்பிடிப்பதிலும் தங்கள் சொந்த வழிமுறைகளைக் கொண்டிருந்த பல அடையாளப்படுத்தக்கூடிய குழுக்கள் இருந்தன.*

**குழுக்கள்**

*(1) பரிசேயர்கள். சுவிசேஷ புத்தகங்களிலேயே மிகவும் அடிக்கடி குறிப்பிடப்பட்டிருக்கும் யூத குழுவினர் பரிசேயர்களாய் இருக்கிறார்கள், ஏனெனில் அவர்கள்தான் ஓய்வுநாள் ஆசரிப்புக் குறித்தும் சுத்தத்தைப் பற்றிய சட்டங்களைக் குறித்தும் இயேசுவை வெகுவாக எதிர்த்தவர்களாய் இருந்தார்கள். இதன் விளைவாக, நாம் அவர்களைப் பற்றி (அவர்கள் மாத்திரம் என்று இல்லாவிட்டாலும்) எதிர்மறையான எண்ணம் கொண்டிருக்கிறோம். ஜோசிபஸ் என்பவர், ஏறக்குறைய ஆறாயிரம் பரிசேயர்கள் இருந்தார்கள் என்றும் அவர்கள் பொதுமக்களிடையே மிகுந்த செல்வாக்குக் கொண்டிருந்தார்கள் என்றும் தெரிவிக்கிறார். பெரும்பாலும், அவர்கள் நடுத்தர தொழிலாளிமக்களாய் இருந்தார்கள்.*

*அவர்களுடைய முதன்மையான நோக்கம் பிரமாணத்தை காத்துக் கொள்வதாய் இருந்தது. பிரமாணத்தைக் காப்பதற்காக, ''வேலியிடுதல்'' (அல்லது ''சுற்றிலும் அடைப்பு இடுதல்'') என்று அவர்கள் அழைத்த, நியாயப்பிரமாணச் சட்டங்களைவிட கண்டிப்பான சட்டங்களை இயற்றி, அவைகளைக் கடைப்பிடித்தார்கள். இதன் கருத்து என்னவென்றால், ஒருவர் "வேலியைக் கடந்து செல்லவில்லையென்றால், அவர் நியாயப்பிரமாணத்தை மீறவில்லை என்பதாகும்." பரிசேயர்கள் "நியாயப்பிமாணத்தைப்" பற்றிய விளக்கத்தில், பழைய ஏற்பாட்டில் காணப்படும் எழுதப்பட்ட மோசேயின் நியாயப்பிரமாணத்துடன் கூடுதலாக, சிலவேளைகளில் ''மூத்தவர்களின் பாரம்பரியங்கள்'' என்று அழைக்கப்பட்ட அவர்களுடைய "வாய்மொழிப்பாரம்பரியங்களையும்" சேர்த்துக் கொண்டார்கள். அவர்கள், மரித்தோர் உயிர்த்தெழுதலையும், மரணத்திற்குப்பின் வாழ்தலையும் மற்றும் வேததூதர்களும் பிசாசுகளும் இருப்பதையும் நம்பினார்கள் (காண்க நடபடிகள் 23:8).*

*(2) சதுசேயர்கள். முதல் நூற்றாண்டு யூதத்துவத்தில் மற்ற முக்கியமான குழுவினர் சதுசேயர்கள், இவர்கள் மேல்தட்டு வர்க்கத்தினர். ஆலயத்தில் பணியாற்றிய ஆசாரியர்கள் இந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள். பரிசேயர் பொதுமக்களுடன் பிரபலமானவர்களாயிருக்கும் வேளையில் சதுசேயர்கள் ஆலயத்தையும் அதனுடன் சம்பந்தப்பட்ட காரியங்களையும் கட்டுப்படுத்துகிறர்களாய் இருந்தார்கள். கிரேக்க செல்வாக்கை தொடர்ந்து எதிர்த்து வந்த பரிசேயர்களைப் போல் இல்லாமல் சதுசேயர்கள் ஒத்துப்போக தயாராக இருந்தார்கள், இதனால் சராசரி யூதனுடைய பார்வையில் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் விடப்பட்டார்கள்.*

*இறையியல் ரீதியில் பேசுவதென்றால், சதுசேயர்கள் பரிசேயர்களை விட நியாயப்பிரமாணத்தைப்பற்றி மிகவும் தடைசெய்யப்பட்ட கண்ணோக்குக் கொண்டிருந்தனர். அவர்கள், அதிகாரப்பூர்வமானவை என்று ஏற்றுக்கொண்ட தோரா (''கட்டளை'' என அர்த்தப்படும்); ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், மற்றும் உபாகமம் ஆகிய புத்தகங்கள் மாத்திரமே. இவர்கள் பரிசேயர்களின் வாய்மொழி பாரம்பரியங்களையும், மரணத்திற்குப்பின் வாழ்வு, தூதர்கள் மற்றும் பிசாசுகளைப் பற்றிய கருத்துக்களையும் வெறுத்தார்கள். லூக்கா 20:27-40ல் இயேசுவிடம் சில சதுசேயர்கள் கேட்ட கேள்வியில் இது பிரதிபலிக்கிறது.*

*(3) எஸ்சென்னெஸ்.* முன்பே குறிப்பிட்டபடி, சில யூதர்கள் ஆலயத்தையும் அதன் ஆசாரியத்துவத்தையும் மிகவும் சீர்கெட்டுப் போனதாக கருதினர். இந்த காரணத்திற்காக இவர்கள் - குறைந்த பட்சம் ஆலயத்தைக் குறித்த காரியங்களில் - பொதுவான யூத வாழ்க்கையிலிருந்து பின் வாங்கினார்கள். எஸ்சென்னெஸ் இப்படிப்பட்ட ஒரு குழுவினராய் இருந்தனர். இயேசுவின் நாட்களில் எருசலேமில் "எஸ்சென்னெ தங்குமிடம்" இருந்ததற்கு ஆதாரங்கள் இருந்தாலும், நன்கு அறியப்பட்ட எஸ்சென்னெ குழுவினர் சவக்கடலின் கரையிலுள்ள கும்ரான் என்ற இடத்தில் தங்கியிருந்தார்கள். வேதபாரகரின் நம்பிக்கைகளையும் பழக்கவழக்கங்களையும் அறிந்து கொள்ள உதவிய சவக்கடல் சுருள்களுக்கு ஆதாரமூலங்களாக இந்த ஜனங்கள் இருந்தார்கள் என கருதப்படுகிறது.

புதிய ஏற்பாட்டில் பெயர்குறிப்பிட்டு எஸ்சென்னெஸ் சொல்லப்படவில்லை, ஆனால் ஜோஸிபஸ் அவர்களைப்பற்றி விளக்குகிறார். மத்தேயு 5:43ல் ஒருவேளை அவர்களைப் பற்றி குறிப்பு ஒன்று காணப்படுகிறது எனலாம், அங்கே இயேசு " 'உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக' என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்" என்றார். பழைய ஏற்பாட்டில் எங்கும் "உன் சத்துருவைப் பகைப்பாயாக" என்று சொல்லப்படவில்லை, ஆனால் இது எஸ்சென்னெஸ்களின் போதனையாக இருந்தது; ஆகவே இயேசு அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கலாம்.

*(4) செலோத்தே.* ரோமர்களுடைய ஆக்கிரமிப்பினால், அனலுள்ள யூத சமுதாயத்தார் ரோமர்களுடைய ஆட்சியை கவிழ்க்க என்ன வேண்டுமானாலும் செய்திருப்பார்கள். இந்த தேசப்பற்றுள்ளவர்கள் செலோத்தே என்று அறியப்பட்டிருந்தார்கள், மற்றும் அவர்களுடைய பிரதான குறிக்கோள் என்பது அரசியல் சுதந்தரத்தில் "இஸ்ரவேலை மீளக்கட்டுவித்தல்" என்பதாக இருந்தது. இந்த இலக்கை அடைய அவர்களில் சிலர் புரட்சி செய்யவும் சதிக்கொலை செய்யவும் விருப்பமாய் இருந்தனர்.

இந்த செலோத்தே என்பவர்கள் யூத மதத்திலேயே ஒரு தனிப்பட்ட குழுவாக இருந்திருக்கக் கூடும், அல்லது இந்த "வைராக்கிமுள்ளவர்கள்" பரிசேயர்களாக இருந்திருக்கக்கூடும். பவுல் தம்மைப்பற்றி "என் பிதாக்களுடைய பாரம்பரிய நியாயங்களுக்காக பக்திவைராக்கியமுள்ளவனாயிருந்தேன்" (கலாத்தியர் 1:14) மற்றும் "பக்தி வைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன்" (பிலிப்பியர் 3:6) என்று குறிப்பிட்டிருந்தார்; ஆனால் இரண்டு வசனங்களுமே அரசியல் வைராக்கியத்தைக் குறிப்பிட்டுப் பேசவில்லை. பவுல் ஒரு செலோத்தேயாக இருந்தார் என்பதற்கு மிகவும் குறைவான ஆதாரமே உள்ளது. இருப்பினும் இயேசுவின் சீஷர்களில் ஒருவர் "செலோத்தே என்னப்பட்ட சீமோன் (பேதுரு அல்ல)" (லூக்கா 6:15) இருந்தார்; ஒரு சமயத்தில் அவர் கலகத்தலைவராகவோ அல்லது செலோத்தே இயக்கத்தில் மும்முரமாக ஈடுபட்டிருந்தவராகவோ இருந்திருக்கவேண்டும். இயேசுவின் சீஷர்களில் மற்றொருவர் மத்தேயு (லேவி) வரி வசூலிப்பவராக இருந்தார் - செலோத்தே சதிக்கொலைக்கு ஆளாகக்கூடிய வகையான யூதனாக இருந்தார் - என்பது வியப்புக்குரியதாக இருக்கிறது.

*(5) ஏரோதியர்கள்.* இவர்களின் பெயர்கள் சுட்டிக்காட்டுவதுபோல, இவர்கள் யூத பொம்மை அரசர்களின் ரோம சிநேகிதர்களின் அரசுமுறையை ஆதரித்த மேன்மையான (மற்றும் ஐசுவரியான்களான) யூதர்களாய்

இருந்தார்கள். மாற்கு 3:6ல், இயேசுவுக்கு எதிராக, அவர்களுடைய எதிரிகளான பரிசேயர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். மத்தேயு 22:15, 16 இராயனுக்கு வரி செலுத்துவதைப் பற்றிய ஒரு கேள்வியைக் கொண்டு இயேசுவை அகப்படுத்த ஏரோதியர்கள் வகைதேடினார்கள் என்று கூறுகிறது. இது ஏரோதியர்களைக் குறித்த சரியான தருணமாக இருந்திருக்க வேண்டும் மற்றும் இயேசுவை நிந்தை செய்ய சரியான வழியாக காணப்பட்டது: வரிசெலுத்துவது "சரி" என்று சொன்னால் மக்களுடைய ஆதரவை இழந்து போவார்; அவர் "வேண்டாம்" என்று கூறினால், ரோம அதிகாரிகளுக்கு எதிராக குற்றப்படுத்தப்பட அவர் இடம் கொடுத்திருப்பார்.

(6) *நாட்டின் மக்கள்*. பலஸ்தீனத்தின் பொது ஜனங்கள் - வேறு வார்த்தைகளில் கூறுவதனால் பெரும்பான்மையோர் - மேலே கூறப்பட்ட எந்த ஒரு குழுவிலும் சேராதவர்களாக இருந்தனர். செல்வந்தர்களாக மற்றும் இறையியலில் அதிக விவேகமுள்ள சமகாலத்தவர்களால் (நாட்டின் மக்கள்-புகழ்ச்சியாக அல்ல) *am ha-aretz* என்று அழைக்கப்பட்டவர்கள், தொழில் வர்க்கத்தை சேர்ந்தவர்களாய் தப்பிப்பிழைப்பதையே வாழ்க்கையில் முக்கியமான அக்கறையாகக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு பரிசேயர்களின் சண்டைகளுக்கோ, அல்லது சதுசேயர் மற்றும் ஏரோதியரின் அரசியல் தந்திரங்களுக்கோ சமயம் இல்லாதிருந்தது. இயேசுவின் பின்பற்றாளர்களில் பெரும்பான்மையோர், இந்தக் குழுக்களிலிருந்து இழுக்கப்பட்டவர்களாகக் காணப்படுகிறது, ஏனெனில் ஒருவேளை இவர்கள் நம்பிக்கையற்றவர்களாக மற்றும் உலகப்பிரகாரமான பலம் மற்றும் செல்வத்தை பொருத்தவரை இழந்து போக ஒன்றும் இல்லாதவர்களாக இருந்தனர்.

### இயேசு யாராக இருந்தார்?

யூதமதத்தின் பல்வேறு விதமான நம்பிக்கையிலும் பழக்கங்களிலும் இயேசு எங்கே பொருந்தினார்? இதில் ஏதாவது ஒரு குழுவில் அவர் அங்கத்தினராயிருந்தாரா அல்லது இவை எல்லாவற்றிலுமிருந்து விலகி தனித்து நின்றரா?

இயேசு ஒரு செலோத்தேயாக இருக்கவில்லை, ஏனெனில் ரோம அரசை கவிழ்த்துப்போட வன்முறையை உபயோகிக்க ஒருபொழுதும் போதிக்கவில்லை; மற்றும் விரோதியையும் நேசிக்கும்படி செலோத்தே அல்லாத கருத்துக்களைப் போதித்தார். அதுபோல அவர் ஒரு ஏரோதியராய் இருக்கவில்லை (அவருக்கு செல்வமோ, அரசியல் செல்வாக்கோ இருக்கவில்லை); அவர் ஆசாரிய வர்க்கத்தைச் சேர்ந்திருக்கவில்லை, ஆகவே அவர் ஒரு சதுசேயனாக இருக்கவில்லை. இயேசுவும் அவருடைய உறவினரான யோவான் ஸ்நானனும் எஸ்சென்னெஸ்களாக இருந்தனர் என்ற கற்பனையானது, அவர்கள் வேறு எந்த குழுக்களுடனும் பொருந்துவதில்லை என்ற உண்மையினால் அப்படியிருந்தது, மற்றும் இருவரும் - கடுமையாக, சில வேளைகளில் - யூதத்துவத்தை கண்டித்தனர் (லூக்கா 3:7-14; மத்தேயு 23:1-39). உண்மையில், இயேசு மற்றும் யோவான் ஆகிய இருவரின் இறையியல் பண்பும் எஸ்சென்னெஸ்களுக்கு நேர்எதிரிடையானவையாக இருந்தன, இது அவர்கள் இருவருமே இந்தக் குழுவின் பகுதியாக இருக்கமுடியாதபடி ஆக்கிற்று.[1]

இயேசுவுக்கும் பரிசேயர்களுக்கும் நடுவில் நடந்த மோதல்களின்

காரணமாக, போதுமான அளவு சுவிசேஷ புத்தகங்களிலும் ஒத்துக்கொண்டபடி, அவர்களுடன் சிறிதளவே பொதுவாகக் கொண்டிருந்தார் என்ற முடிவுக்கு நாம் வர சாய்வோம். இருப்பினும் அந்த ஊகம் தவறானது. நியாயப்பிரமாணத்திற்கு ஒரு வலுவான மரியாதையை இயேசு பரிசேயர்களுடன் பகிர்ந்துகொண்டார் (மத்தேயு 5:17-19), பிரமாணத்தின் ஆவியை நிறைவேற்றவில்லையென்று அவர்களைக் குற்றப்படுத்தினாலும் அவர் இதைச் செய்தார் (மத்தேயு 5:20; 23:16-28). மத்தேயு 23:1-3ல் பரிசேயர்களின் ஆன்மீக தலைமைத்துவத்திற்கு, ஒரு ஆச்சரியப்படத்தக்க மரியாதையை நாம் காண்கிறோம்: "வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்; ஆகையால் நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள், அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில் அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்." பரிசேயர்கள் தங்கள் போதனையின்படி வாழாதிருந்தது அவர்களுடைய தவறாயிருந்தது; அதைத்தான் இயேசு இடித்துரைத்தார் - போதனைகளையல்ல. அதுபோல, சதுசேயருக்கு எதிராக, உயிர்த்தெழுதல் மற்றும் மரணத்திற்குப் பின்னும் வாழ்தல் என்ற கொள்கைகளை ஆதரிப்பதில் இயேசு பரிசேயர்களுடன் சேர்ந்து கொண்டார் (லுக்கா 20:27-40). அவர், தூதர்கள் மற்றும் பிசாசுகள் நிலைத்திருப்பதைப்பற்றிய அவர்களுடைய நம்பிக்கையையும் பகிர்ந்து கொண்டார். (லூக்கா 20:36 ல் அவர் தூதர்களைப் பற்றிப் பேசினார், மற்றும் இயேசு பிசாசுகளைத் துரத்தும் சந்தர்ப்பங்களைக் காண்கிறோம்.) சில வேளைகளில் இயேசு பரிசேயர்களுடன் சிநேக சகவாசத்துடன் பழகினார் (லூக்கா 7:36; 11:37; 14:1). "சில பரிசேயர்" வந்து ஏரோது அவரைக் கொல்ல முயற்சிப்பதாக இயேசுவை எச்சரித்தார்கள் (லூக்கா 13:31), மற்றும் ஒரு வேதபாரகரை (அவர் ஒரு பரிசேயராக இருக்கக்கூடும்) "தேவனுடைய ராஜ்யத்துக்குத் தூரமானவனல்ல" என்று இயேசு பாராட்டினார் (மாற்கு 12:28-34). ஒரு பரிசேயன் இயேசுவுக்காகப் பேசினார் மற்றும் பின்பு சனதரீன் சங்கத்தின் இன்னொரு உறுப்பினருடன் சேர்ந்து அவருடைய சரீரத்தை அடக்கம் செய்தார் (யோவான் 3:1; 7:45-52; 19:39, 40).

மெய்யாகவே, சுவிசேஷ புத்தகங்களில் காணப்படும் பல "மோதல் கதைகள்" விசேஷமாக வெளிப்படுத்தியுள்ளபடி குறிப்பிட்ட வழிகளில் இயேசு பரிசேயரிடமிருந்து வேறுபாடு கொண்டிருந்தார். மோசேயின் நியாயப்பிரமாணத்தில் குறிப்பிடாத அநேக செயல்களைத் தடுப்பதின் மூலம் ஓய்வுநாளைப் பாதுகாக்க பரிசேயர் வைராக்கியமாய் இருந்த வேளையில், இயேசு மனித தேவைகளைச் சந்திப்பதை விட ஒய்வுநாளைக் கடைப்பிடிப்பதை இரண்டாம் இடத்தில் வைத்தார் (மாற்கு 2:23-3:5; லூக்கா 13:10-17). அவர் பரிசேயருடைய உணவு சம்பந்தமான கட்டளைகளுக்காக அவர்களைக் கடிந்து கொண்டு, ஒருவன் அல்லது ஒருத்தி உண்பது அவர்களை தீட்டுப்படுத்தாது ஆனால் உள்ளத்திலிருந்து புறப்படுகிறவைகளே அவர்களைத் தீட்டுப்படுத்தும் என்றார் (மாற்கு 7:14-23). மோசேயின் நியாயப்பிரமாணத்தின் நோக்கத்தோடு பரிசேயர்களின் வாய்மொழி பாரம்பரியம் மோதியபோது அவர் அவர்களுடைய பாரம்பரியத்திற்கு எந்தவித மரியாதையும் காட்டவில்லை.

இயேசுவின் சொந்த கண்ணோட்டங்கள் அநேக விஷயங்களில் பரிசேயர்களின் கண்ணோட்டங்களுடன் இணையாக நெருங்கிச் சென்றாலும்,

*அவர் அவர்களில் ஒருவராக இருந்தார் என்பது சாத்தியமில்லாததாக இருக்கிறது. அவருடைய குடும்பப் பின்னணியும், ஏழைகள் தாழ்த்தப்பட்டோர் ஆகியோருடன் தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட தம்மையும் அவரை பரிசேயரல்லாதவராகவே காட்டுகிறது (காண்க லூக்கா 15:1, 2). இயேசு சாதாரண மக்களில் ஒருவராக இருந்தார், "நாட்டின் மக்களாக" - ஆனால் மிகவும் அசாதாரண வழியில் - என்ற முடிவுக்குத்தான் வரவேண்டும். இயேசு "இம்மைக்குரிய" யூத பின்னணியிலிருந்து வந்தார் என்று இது அர்த்தப்படுவதில்லை. இதற்கு மாறாக, அவருடைய பெற்றோர், அவருடைய பிறப்பு சம்பந்தப்பட்ட பல நிகழ்வுகளில் காண்கிறபடி, அர்ப்பணிக்கப்பட்ட, கைக்கொள்ளுகிற யூதர்களாய் இருந்தனர் (மத்தேயு 1; 2; லூக்கா 1; 2).*

## *முடிவுரை*

*இயேசுவை அவருடைய யூத பின்னணியிலிருந்து தனிப்படுத்தி அவரைப் பற்றி அறிந்து கொள்வதைப் பார்க்கிலும், அவருடைய பின்னணியைப் பற்றி நம்மால் அறிந்து கொள்ள முடிவதெல்லாவற்றையும் அறிந்து கொண்டு, பின்பு அது சம்பந்தப்பட்ட வகையில் அவரை அறிந்து கொள்வது புத்திசாலித்தனமாக இருக்கும். மேசியாவாகிய இயேசு முதன்முதலாக யூதனாகிய இயேசுவாக இருந்தார்.*

---

*குறிப்பு*

[1]*இது இந்த புத்தகத்தின் முதல் அதிகாரத்தில் விளக்கப்பட்டிருக்கிறது* "The Dead Sea Scrolls and the Historical Jesus," the first chapter of James H. Charlesworth, ed., *Jesus and the Dead Sea Scrolls* (New York: Anchor Bible Reference Library, Doubleday, 1992).